மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதி பதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் கார்த்திகைத்திங்கள் 01 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.38/2021-ல்**

**அசல் வழக்கு எண். 96/2016**

01. மணிமேகலை
02. ராஜசுலோச்சனா ...(இப்பால் இறந்தார்
03. விஜயலெட்சுமி
04. அஞ்சப்பன்
05. கண்ணகி
06. செல்வநாயகம் ....மனுதாரர்கள்/வாதிகள்
07. ஆறுமுகம்
08. சத்தியா
09. சித்ரா
10. சரிதா ...7 முதல் 10 மனுதாரர்கள்/இறந்த 2 ம் வாதியின் வாரிசுகள்/அசல் வழக்கில் 7 முதல் 10 வாதிகளாக சேர்க்கப்படவேண்டியவர்கள்)

**// எதிர்//**

1. ராஜேஸ்வரன்
2. நாகேஸ்வரன்
3. மல்லிகா
4. சார்பதிவாளர், மன்னார்குடி
5. மாவட்ட ஆட்சியர், திருவாரூர். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 02.02.2021 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று (17.11.2022) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.உதயகுமார் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு. S. விஜயன், திரு.K. சிவசுந்தர், திரு.M. நிலவழகன், திரு. R. கண்ணதாசன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று(17.11.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது இறந்த 2ம் எதிர்மனுதாரருக்கு வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 352 நாள் காலதாமதத்தினை மன்னித்து இம்மனுவினை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி காலவரையைரை சட்டம் பிரிவு 5-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

வழக்கானது நிலுவையிலிருக்கும்போது 2ம் வாதி ராஜசுலோச்சனா 12.09.2019 ம் தேதியன்று இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான ராஜசுலோச்சனாவின் கணவர், மற்றும் அவரது மகள்கள் சத்தியா, சித்ரா, சரிதா ஆகியோர்களை அசல் வழக்கில் 7 முதல் 10 தரப்பினர்களாக சேர்த்துக்கொண்டு அசல் வழக்கை மேல் நடத்த வேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரர் மஞ்சள்காமாலை நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாலும், கொரோனா ஊரடங்கு காலத்தினாலும் உரிய நேரத்தில் மேற்படி மனுவினை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதனால் மேற்படி காலதாமதத்தை மன்னித்து இம்மனுவினை அனுமதிக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. 2 **ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**:- ( **இதனை 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தனதாக ஏற்றுக்கொள்கிறார்கள்**) :-

மனுவில் 2ம் வாதி 12.09.2019 ம் தேதியன்று காலமாகிவிட்டார் என்று தெரிவித்து சுமார் 1 வருடத்திற்கு பிறகு வாரிசுகளை சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட

காலதாமதத்திற்கு எவ்வித விவரங்களும் சொல்லப்படாமல் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

அசல் வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கில் அலட்சியமாக இருந்துவிட்டு தற்போது மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரையில் கூறப்பட்டுள்ளது.

4 வது மற்றும் 5 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவுக்கு எதிருரை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், பொதுவான எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**5. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

மனுவினை பரிசீலிக்கையில், மனுதாரர் இறந்த காலக்கட்டத்தை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கையில் மேற்படி காலக்கட்டம் கொரனா ஊரடங்கு காலக்கட்டம் இல்லை என்ற போதும், ஒரு இறப்பு சம்மந்தமான பதிவேட்டு ஆவணங்களை பெறுவதற்கு வழக்கமாக ஏற்படும் காலதாமதத்தை கருத்திற்கொள்கிறது.

மேற்படி காலக்கெடுவானது கொரோனா நோய் தொற்று ஊரடங்கு காலக்கட்டத்திற்குள் பயணிப்பதாலும் நீதிமன்றம் மேற்படி கொரோனா காலக்கட்டங்களில் முழுமையாக இயங்காமல் இருந்த சூழ்நிலையை கருத்திற்கொண்டும் இம்மனுவில் கூறியிருந்த காலதாமதத்தை நியாயமானது என்று இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

பொதுவாகவே, தாமதமாகும் ஒவ்வொரு நாட்களுக்கும் உரிய காரணம் தெரிவிக்கப்படவேண்டும் என்ற சட்ட விதிக்கு உட்பட்டு இந்நீதிமன்றம் இம்மனுவினை பரிசீலிக்கையில் மேற்படி கொரோனா ஊரடங்கு மேற்படி தாமதத்திற்கு ஆதரவாக உள்ளது என்பதை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

எனவே, இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித கஷ்ட நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்திற்கொண்டு இம்மனுவினை அனுமதிப்பதே உசிதம் என்று தீர்வுக்காண்கிறது.

**முடிவில்**, இம்மனுவானது இறந்துபோன 2ம் வாதி ராஜசுலோச்சனாவின் வாரிசுகளை சேர்ப்பதற்கு ஏற்பட்ட 352 நாட்கள் காலதாமதத்தை அங்கீகரித்து இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (17.11.2022) அவையறியப்பகரப்பட்டது.

**A S AMEERDHEEN**

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2022.11.17 19:30:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)